International Research Journal of Education and Technology (IRJEdT)
‖ ISSN: 2581-7795, Impact Factor 5.007 ‖
‖ Peer-Reviewed | Open Access | International Journal ‖
‖ Volume: 09 | Issue: 08 | Aug - 2026 | www.irjweb.com ‖

# தரும சிவராம் ( பிரமிள்) படைப்பும் சூழலியல் மொழியும்

முனைவர் ப.மோகன் MA.,Mphil., Ph.D.
உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை, ஸ்ரீ கிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
கோவை - 641 008.

## முன்னுரை,

சூழலியல் என்பது பிரபஞ்சத்தின் அணு அணுவாய் நிற்பதுவும் நடப்பதுவும் பறப்பதுவுமாய் சூழ்ந்து இருக்கும் அனைத்துமே சூழலியல் ஆகும். தமிழ் மொழியில் உள்ள இலக்கியங்கள் அனைத்தும் சூழலியல் தகவமைப்பில் உருவானவே ஆகும். திணைக் கோட்பாட்டு முறைமையும், வழிபாட்டு முறைமையும் மரபு சார் முறைமையும், தமிழர்களின் சூழலியல் வாழ்வியலுக்குச் சான்றாதாரங்களாக விளங்குகின்றன. அக புற வாழ்வியலும் சூழலியல் அடிப்படையிலேயே நிகழ்வதை அறிய முடிகிறது. காலச்சூழல் கேற்ப இலக்கிய வடிவங்களும் கருப்பொருள் மாற்றங்களும் நிகழ்ந்து வந்துள்ளதையும் இலக்கிய வடிவ மாற்றங்களும் திகழ்ந்து வந்துள்ளதையும் அறியலாம். கற்றால் தெளியலாம்.

## சூழலியலும் மொழியும்

ஒரு மொழியின் இலக்கியங்கள் அம்மக்களின் சூழல் சார்ந்த வாழ்வியலை உணர்த்தி இருக்கும்.அதுதான் அம்மொழியின் தனித்த அடையாளமும் , தனித்த பெருமையும் ஆகும். தமிழ் மொழி அத்தகைய பெருமையும் தனிச் சிறப்பும் பெற்று

International Research Journal of Education and Technology (IRJEdT)
‖ ISSN: 2581-7795, Impact Factor 5.007 ‖
‖ Peer-Reviewed | Open Access | International Journal ‖
‖ Volume: 09 | Issue: 08 | Aug - 2026 | www.irjweb.com ‖

விளங்குவதை அறியமுடிகிறது.உலகத்தில் சில மொழிக் குடும்பங்கள் அந்த மக்கள் மொழி பேசும் மொழியாக இல்லாமல் அவை கடன் வாங்கப்பட்டதாகவும் , இணைப்பு மொழியாகவும் இருப்பதை அறியமுடிகிறது.

ஒருமொழியில் செம்மொழி ஆய்வுக் கூறுகளில் ஒன்று அம்மக்கள் பேசும் அம்மக்களியிடையே உருவாகி அம்மக்களின் பண்பாட்டு வாழ்வியலை, கலை வெளிப்பாட்டை வெளிப்படுத்தும் மொழியாக இருப்பதே சிறந்த செம்மொழிக்கான தகுதியும் அடையாளமுமாகும் என்கின்றனர் மொழி ஆறிஞர்கள். மொழி மட்டுமின்றி தமிழ் இலக்கணங்களும் அம்மக்களின் வாழ்வியலை சூழலியலோடு வெளிப்படுத்தி இருப்பதைக் கற்றால் அறியலாம் . தமிழ் மொழி அத்தகையப் பெருமையும் சிறப்பையும் பெற்று , உலகத்தின் மூத்த மொழியாக சிறந்து இருப்பதையும் அறியதக்கதாகும். சூழலியல் வாழ்வோடு கலந்து வெளிப்படும் மொழியானது காலத்தால் அழியாமல் நிலைத்து நிற்கும் என்பது திண்ணமாகும்.

## இயற்கை கருப்பொருளும் சுற்றுச் சூழலியலும்

இயற்கை கருப்பொருளும் சுற்றுச்சூழலியலும் மனிதகுல வளர்ச்சியின் முக்கியக் காரணிகளாகும். நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் -என்ற இயற்கையின் அடிப்படைகளைப் பற்றியும் தமிழ்ப் புலவர்களும் தற்காலக கவிஞர்களும் சூழலியல் சார்ந்த பதிவுகளைப் பதிவிடாமல் இருந்ததில்லை. குறிப்பாக சங்க இலக்கியங்கள் முழுவதும்முதற்பொருள் கருப்பொருள் உரிப்பொருள் மூன்றிலும்சூழலியல் சார்

International Research Journal of Education and Technology (IRJEdT)
‖ ISSN: 2581-7795, Impact Factor 5.007 ‖
‖ Peer-Reviewed | Open Access | International Journal ‖
‖ Volume: 09 | Issue: 08 | Aug - 2026 | www.irjweb.com ‖

வாழ்வியலையே எடுத்துக் காட்டுகின்றன. சூழலியல் அறிவோடே, பண்பாட்டோடே, மரபுகளோடே, தொன்மைகளோடே நமது முன்னோர்களின் வாழ்வியல் இயங்கி வந்திருப்பதை அறியலாம்.

இயற்கையோடு இனியதொரு வாழ்க்கை நடத்தி வந்த நம் முன்னோர்களுக்கு மிகவும் சிறப்பான நீண்ட காலத் திட்டமிடல் இருந்தது. ஊர்களை, நகரங்களை தாழ்வானப் பகுதிகளைக் குளங்களை , வாய்க்கால்களை நீர் கட்டுமான இடங்களை உருவாக்கி இயற்கைக்கு ஊறு செய்யாமல் இயற்கையோடு இணைந்து வாழ்வியலை மேற்கொண்டனர். வெள்ளம் பொங்கி வந்தாலும் மனிதர்களுக்குத் தொல்லையில்லாத வகையில் இல்லங்களையும்வாழ்வியல் பகுதிகளை தகவமைத்துக் கொண்டார்கள். உணவும் உடையும் இருப்பிடமும் இயற்கையோடு இணைந்த சூழலியல் வாழ்வே நம் முன்னோர் வாழ்வாகும். இவ்வாழ்வினை பல்வேறு கலை வடிவங்களில் வெளிப்படுத்தினர். சித்திரங்களில் , ஓவியங்களில் , இசைகளில் , இலக்கியங்களில் வெளிப்படுத்தினர். குறிப்பாக இலக்கியங்களில் நிறைவான பதிவுகள் இருப்பதை அறியலாம். இவ்வுலக உள்ளடக்கத்தில் இயற்கையானது எங்கும் நீக்கமற நிறைந்து கிடக்கின்றன. எண்ணற்ற அசைவுகளில் எண்ணற்ற அர்த்தங்கள் பிறக்கின்றன. உயிரினங்கள் அனைத்தினுள்ளும் உயிராய், இயற்கை அமைகின்றது. இயற்கைக்கு அடிமையாகாதது இவ்வுலகில் எதுவும் இல்லை எனலாம். சந்திரன் சூரியன், நட்சத்திரம், மின்னல், மழை, இடி,கடல், மலை, நதி. காடு, ஆறு. தாவரம். புல், பூண்டு என இயற்கை விரிவானது படர்ந்து செல்கின்றது.

International Research Journal of Education and Technology (IRJEdT)
‖ ISSN: 2581-7795, Impact Factor 5.007 ‖
‖ Peer-Reviewed | Open Access | International Journal ‖
‖ Volume: 09 | Issue: 08 | Aug - 2026 | www.irjweb.com ‖

**இயற்கைச் சூழல் தரும் பிரமிளின்படைப்பாக்கம்.**

மனித மனமானது இயற்கையை நோக்கும்போது உவகை பூண்டும், உணர்ச்சி பொங்கியும், தனக்குள் அவற்றை இருத்தியும் அவற்றோடு ஒன்றாகக் கலந்து விடுகிறது.உலகத்தில் படைக்கப்பட்டுள்ள எல்லா மனிதனுக்குள்ளும் இயற்கையானது, இயற்கையாய் அமைந்து கிடக்கிறது.பழந்தமிழர் இயற்கையோடியைந்து இன்பவாழ்க்கை வாழ்ந்தனர். எங்கும் நீக்கமற நிறைந்திருக்கின்ற இயற்கையை இறைவனாகக் கண்டனர். காலையிலும், மாலையிலும் ஞாயிற்றின் செம்மையையும், வானத்தில் படரும் செம்மையையும் திசைகளின் இயக்கத்தையும் கண்டு இன்புற்று இருந்த மனிதன் செவ்விய இயற்கை அழகினைச் 'சேய் என்றும். அம்மக்கள் தங்களின் கண்ணுக்குப் பச்சைப் பசேலெனக் காட்சி தரும் காட்டின் இயற்கையை 'மால்' என்றும்அழைத்து மகிழ்ந்தனர். காதல்,வீரம்,கொடைமுதலியவற்றைக் கருப்பொருளாகக் கொண்டு பாடிய போதிலும் நிகழ்ச்சிகளுக்குப் பின்னணியாக அவர்கள் அமைத்த இயற்கைக் காட்சிகள் சிறப்பாக அமைந்திருக்கின்றன. விந்தையான காட்சிகள், எழிலான தோற்றங்கள், அழகிய மரம், செடி, கொடிகள் ஓடியாடும் விலங்குகள், கூடுகட்டி வாழும் பறவைகள், நெற்கதிர்கள், குளங்களில் தாமரைப்பூக்கள் கடற்கரையில் சோலைகள், உப்பங்கழிகள். கடலலைகள். பருவக்காற்றுகள் முதலியவைகளைச் சொல்லோவியங்களாகத் தீட்டி மகிழ்ந்தனர். எனவே, கவிஞர்களின் " **முதல் தாயாகவே இயற்கைச் சூழல்**" இருப்பதை அறிய முடிகிறது.

International Research Journal of Education and Technology
(IRJEdT)
‖ ISSN: 2581-7795, Impact Factor 5.007 ‖
‖ Peer-Reviewed | Open Access | International Journal ‖
‖ Volume: 09 | Issue: 08 | Aug - 2026 | www.irjweb.com ‖

**சூழலியலும் எடுத்துக்கொண்ட பொருண்மையும் இணைத்துப் பாடும் போக்கும்.**

கவிஞர்களின் கவிதைகளில் இயற்கையானது சமூகத்துடன் இணைத்துப்பாடும் போக்கும், அகம் மகிழ அனுபவிக்கும் பன்முகமும், முருகியல் உணர்வுகளும் சூழலியல் அமைவுகளும் வெளிப்படுவதை அறியமுடிகின்றன. கவிஞர் படைத்திடும் சூழலியல் - எழில் உருப்பெற்றும், அழகியல் மிகுந்தும்மனத்தினுள் மலர்கின்றன. மனதினுள் பதியம் விதையாகின்றன. சிந்தனை, தேடல், பரிமாணம். அறிதல் போன்றவற்றையெல்லாம் கவிஞகளின் கவிதைகள்சூழலியல் சாளரங்களின் வழி கவிதை மொழி வெளிப்படுவதை அறியலாம்.பாரதி முதல் தற்கால கவிஞர்கள் வரை, தான் சார்ந்த சூழலியல் அறிவினை தத்தம் படைப்புக்களில் பதியம் போடுவதையும் அறியலாம். இயற்கைச் சூழலியலை அதிகமாகப் படைப்புக்குள் பயன்படுத்தும் கவிஞர்களில் பாரதி பாரதிதாசனுக்கு பிறகு கவிஞர் பிரமிள் திகழ்கின்றார். எண்ணற்ற இயற்கைக் கூறுகளின் இணைவில், சூழல் சார்ந்த அடுக்கு நிலைகளில் இயற்கையின் பேராற்றலையும்பேரியக்கத்தையும் பதிவு செய்கிறார்.

**மின்னலும் சூழலியலும்**

கவித்துவத்தில் காணப்படும் உள்ளடக்கச் சொற்கோவைகள் நேர்த்தியான இயற்கைக் கூறுகளைக் கட்டமைத்து இயல்பான காட்சி மொழி அடிப்படையில் சூழல்மொழி வெளிப்படுத்தப்படுகிறது. படைப்பின் தளத்திலும், சுவைஞனின் தளத்திலும் பிரமிளின் கவிநேர்த்தி பல புதுமைகளைக் கொண்டு அமைகிறது. இவரின்

“மின்னல்” என்ற கவிதையொன்றில் பல்வேறு பரிமாணங்களில் சூழல் தளத்தை அறியச் செய்கிறது.

**“ ககனப்பறவை / நீட்டும் அலகு / கதிரோன் நிலத்தில் / எறியும் பார்வை**

**கடலுள் வழியும் / அமிர்தத்தாரை / கடவுள் ஊன்றும் / செங்கோல்" 1**

பிரமிள் மின்னல் வெளிப்படும் நிகழ்வினை மிக அழகாக காட்சிப்படுத்தி, வானிலை நிகழ்வினை சூழலியல் நிகழ்வாகவேஅமைவதைச் சுட்டுகிறார். நம்மை சுற்றி இருக்கும் நிகழ்வுகளை கவனிப்பதும் கருத்தோட்டத்தில் பதிவு செய்வதும் படைப்பாளின் நோக்கம் அளப்பரியதாகும். வடிவம், ஆற்றல் போன்ற அமைவுகளை கொண்டு, மின்னல் - கடவுளின் வடிவமாக அதாவது இயற்கையின் வடிவமாக, அதாவது சுற்றுப்புறச் சூழலியலாக வெளிப்படுவதை நன்கு பதிவு செய்கிறார் பிரமிள்.

தான் கண்ட சூழலியல் காட்சியினை மிக அழகியலோடு பதிவு செய்துள்ளார்.

## எரிகற்களின் சூழலியலும் கவித்துவ ஆளுமையும்

“ **எரிகல்** ” என்ற கவிதையானது பூமியை நோக்கி வரும் ஒரு செயல்பாட்டை உணர்த்துகின்றது. விண்வெளியில் விண்மீன் குடும்பங்கள் உள்ளன. நாம் வாழ்வது சூரியக்குடும்பம். சூரியனும் ஒரு விண்மீன் என்பது நாம் அறிந்த ஒன்றாகும். இயற்கை மாறுபாடுகளினால், விண்மீன் மற்றும் துகள்களினால் ஆன வால்நட்சத்திரம் போன்றவற்றின் சிறுபகுதிகள் பிளவுபட்டு, புவி ஈர்ப்பு விசையின் காரணமாகப் புவியை நோக்கி வருகின்றன. நீலநிறக் கடல் போன்று இருக்கும் வானத்தில் இருந்து முத்தாய் விழும் எரிகல் இருட்கரியின் வயிரம் போல் மின்னுகின்றன. வயிரத்திற்கு

International Research Journal of Education and Technology
(IRJEdT)
‖ ISSN: 2581-7795, Impact Factor 5.007 ‖
‖ Peer-Reviewed | Open Access | International Journal ‖
‖ Volume: 09 | Issue: 08 | Aug - 2026 | www.irjweb.com ‖

மின்னும் சக்தி இல்லை மெருகூட்டும் பொழுது தான் ஒளிர்கிறது. இது போன்ற அறிவியலின் செயல்பாடுகளை நன்கறிந்த கவிஞர் அதனின் இயல்புத் தன்மைகளைச் சூழலியலோடு இணைத்து விளக்குகின்றார்.

எரிகல் கீழே விழும் நிலையிலிருந்து கலித்துவம் வெளிப்படுகிறது. வானக்கடல் முத்து, வயிரம் உதிர்கின்றன. உதிரும் சிறுகுழவி என்ற உருவகச் சொல்லமைவு சுவைஞனின் மனதில் அழகியல் உணர்வுகளை எழுப்புவதோடு மட்டுமல்லாமல் எரிகல்லின் பொலிவு, ஆற்றல். இயக்கம் இறுதிநிலை மற்றும் தோற்றநிலைகளையும் அதனின் சூழலோடு மனதில் தோற்றுவிக்கின்றன. வான வெளிப் பரப்பில் நடக்கும் இயற்கை சூழல் நிகழ்வுகளை, பதிவு செய்யத் துடிக்கும் படைப்பாகவும் அமைகின்றது. இக் கவிதையில் அறிவியல் உண்மைகளும், கவித்துவமும் மற்றும் சூழலியல் இயல்பும் இணைந்தே செயல்படுகின்றன.

## மழை பெய்யும் சூழலும், பருவகால நிலையும்.

சுழல் சார்ந்த காட்சி முழுமைக்குள் பிரமிளின் சிந்தனை கவிமொழிக்குள்தான் எத்தனைக் கனமான அர்த்தங்கள் பிறக்கின்றன. தனித்த சொல்லாட்சிக்குள் தான் எத்தனைக் காட்சிமொழி விரிவுகள் வளர்கின்றன என்பது பிரமிளின் கவித்துவங்களில் நன்கு அறியமுடிகிறது. மழை பொழியும் நிகழ்வுகளில் இக்கவிதை பல்வேறு தொடர் நிகழ்வுகளாய்ச் செயல்படுகின்றன. பரிதியின் ஒளியை மிஞ்சும் மின்லை குளத்தில் மழைத்துளி விழும் அழகு. மண்ணுக்குள் கிளைவிடும் வேரின் தாவரவியல் சூழல்,

International Research Journal of Education and Technology
(IRJEdT)
‖ ISSN: 2581-7795, Impact Factor 5.007 ‖
‖ Peer-Reviewed | Open Access | International Journal ‖
‖ Volume: 09 | Issue: 08 | Aug - 2026 | www.irjweb.com ‖

கண்ணாடியாய் எழுந்தெழுந்து ஓடிச் சாயும் கடல் அலைகள் போன்ற இயற்கை நிகழ்வுகளின் தொகுப்பாய் கவித்துவம் வெளிப்படுகின்றது.

**மாய் பூக்கும் / மழை விதைகள் / முகிலின் குரல் எச்சில் / வான சுவரொட்டிப் பல்லிக் குமுறல் / பரிதி கிழித்து / தொங்கும் மின்னல் தண்ணீர் பின்னி /நீர் நூல் திரளின் / வேர் கிளைத்த மலை முளைகள் ( காற்றின் சவுக்குத் தொடர் / உருகிய கண்ணாடிக் / கடல் அலைப்பாதை / கனங்கள் கழன்றது / பருவத்தின் ஓர் /ஒற்றைப் பிரிந்தது / வெளியில் மாரிச்சுவர் எழுந்தது தூரிகை இயற்கை புரண்டது"2**குளமாய் பூக்கும் மழைவிதைகள், வேர் கிளைத்த மலை முளைகள்.தண்ணீர் பின்னி,நீர்நூல் திரள், கடல அலைப்பாறை, போன்ற சொல்லாட்சிகள் ஒவ்வொன்றிலும் **'சூழல் பிரயோகம்"** எழுகின்றது. நுண்மையான சூழல் புலத்தில் ,மிக இயல்பாக..,இயற்கையின் விசாலமாக கவிமொழி கோர்த்துக் கிடப்பதை அறியமுடிகின்றது. எனவே. இக்கவித்துவத்தில் நிகழ்வும், அழகியலும்,சூழலியலும் ஆகிய மூன்றும் எழுகின்றதை அறியமுடிகிறது.

**விண்மீன்,வானம்,இருள், ஒளிக்கதிர்கள்,**

**கடல்...முகில், திசை, புழுதி, புகை - தகதகக்கும் சூழல்.**

**"வெள்ளித் தூளின் பாதை தூவி/ மெல்லக் காற்றுள் விழும் விண்மீன்/**

**/வானத்தின் இருள் /மரத்துப் பூமிப் பூவில்/ தேனுறிஞ்சும் நாக்குகளா ஒளிக்கதிர்கள்/**

**/கடல் நெற்றி தகதகக்கச் சூழல்/ நிலத்தின் உடல் ஒற்றி இருளுறிஞுசும்**

**ஒளிவெண்பஞ்சா?**

International Research Journal of Education and Technology
(IRJEdT)
‖ ISSN: 2581-7795, Impact Factor 5.007 ‖
‖ Peer-Reviewed | Open Access | International Journal ‖
‖ Volume: 09 | Issue: 08 | Aug - 2026 | www.irjweb.com ‖

**/முகிலின் வெடிமருந்து பிளந்த இமைக்கணம்/ ... திசையுள் மான்கள் தாவும் நோக்கு//புழுதி புகைந்திரும் மழைத்துளிக் குச்சி ...3**

அண்டவெளிப்பரப்பின் அறிதலும், ஒளிக்கதிர்களைப் பற்றிய தேடலின் ஆழமும் விண்ணுலகத்திலும் மண்ணுலகத்திலும் ஏற்படும் மாற்றம் சார்ந்த நிகழ்வுகளும், கவித்துவத்தின் அழகியல் நேர்த்தியில்,இயற்கைச் சூழலின் இயக்கப் போக்குகளையும் கவிஞர் பிரமிள் மனமகிழ்ந்து பதிவுசெய்துள்ளார். கவித்துவத்தின் இயக்கநிலையில் நோக்கும்போது, கண்டுகளித்தவைகளை அழகுமிக்க சொற்கோர்வைகளாகவும், இயற்கையின் இயக்க ஆற்றலையும். அதனின் சுவைமிக்க தன்மைகளையும் வெளிப்படுத்தும் நிலையிலும் அமைகின்றன.பூமியில் விழும் ஒளிக் கதிர்களும், இருளை உறிஞ்சும் பரிதியும், எங்கும் மான்களாய் தாவிக்கொண்டிருக்கும் நட்சத்திரங்களும் ஆகிய எல்லாம் அழகுமிக்க சொல்லாட்சிகளே ஆகும். இதில் மழை பொழியும் போதும், பொழிந்த பின்பும், ஏற்படும் நிகழ்வுகளைப் பதிவுசெய்து கவித்துவத்தின் வழி வெளிப்படுத்துகின்றார். விண்மீன், வானம், இருள், பூமி. ஒளிக்கதிர்கள், கடல், முகில், திசை,புழுதி, புகை, போன்றவைகள் கவிதைகளில் சூழலியல் கூறுகள் வெளிப்படுகின்றன.

**'ஒளிவெண் பஞ்சா?"4**

**"நாக்குகளா ஒளிக்கதிர்கள்?"5**

ஆகிய சொல்லாட்சிகள் உருவகத்தன்மையில் வினாக்களை எழுப்புகின்றன. கவித்துமொழிஅழகியல் சூழலை ஏந்தியபடியே செல்கின்றன. இயற்கையின்

International Research Journal of Education and Technology
(IRJEdT)
‖ ISSN: 2581-7795, Impact Factor 5.007 ‖
‖ Peer-Reviewed | Open Access | International Journal ‖
‖ Volume: 09 | Issue: 08 | Aug - 2026 | www.irjweb.com ‖

விரிவுக்களத்தில் படைப்பனது விரிவுநிலை பெறுவதையும் சூழல் நிகழ்வோடு நுணுக்கமாக பதிவு செய்து இருப்பதையும் அறியமுடிகிறது.

**பல்லுயிர் சூழலியல் - ( பல்லியும் வெட்டுக்கிளியும்.)**

**" ஈரக்குடையில் மேல் / பச்சை வெட்டுக்கிளி / அம்மிக்கு அருகில் / சுயத்தட்டில் /வெந்தயம் சீரகம் / ஏதுமற்ற அஆருடன் / கணிமாயக் கத்தரிக்காய் /வி வயிற்றில் / சூஸ்மூட்டை / அதனதன் உயிர்ப்புடன் / அத்தனையும் / நீயும் நானும் நெற்றிசுளித்து நிழலுக்கு அலைந்து./ 6**

இறுதி வடிவத்தில் குறிப்பொருளைத் தாங்கி வெளிப்படுகின்றன. நீயும் நானும் நெற்றி சுளித்து நிழலுக்களைந்து என்ற சொல் மூலம் பல்வேறு அர்த்தக் குறியீட்டுப் பொருளை இக்கவிதை நமக்குத் தருகின்றது. பல்லியும் வெட்டுக்கிளியும் எவ்வாறு எந்த ஒரு இடையூறும் எவருக்கும் செய்யாமல் மிக இயல்பாய் இயற்கையாய் சுயத்தை இழக்காமல் வாழ்ந்து வருகின்றது. ஆனால் மனிதனாகிய நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்கின்ற உள்ளடக்கக்களம் அமைந்திருப்பதை அறிய முடிகிறது.

காலம், முதுமை, பரிதி, ஊமை, சிதைவு, கனவு திரிசங்கு ஆகிய கவிதைகளில் குறியீட்டுக் களம் அமைந்துள்ளன. பிரமிளின் ஒவ்வொரு சொல்லும் அதன் அர்த்தம் அனுபவம் ஆகிய நிலைகளில் குறிப்புப் பொருள் தன்மை கொண்டுள்ளன. படிம் நிலைகளில் அமைந்து குறியீட்டுக் களத்தினை ஏற்படுத்திக் கொடுக்கின்றது. ஒவ்வொரு சொல்லாட்சிகளின் வீச்சும் வீரியமிக்கதாக விளங்குகின்றன. பரிதியின்

International Research Journal of Education and Technology (IRJEdT)
‖ ISSN: 2581-7795, Impact Factor 5.007 ‖
‖ Peer-Reviewed | Open Access | International Journal ‖
‖ Volume: 09 | Issue: 08 | Aug - 2026 | www.irjweb.com ‖

சொல் எங்கும் நீக்கமற நிறைந்து பன்முக உள்ளீட்டுச் சூழலாக அமைகிறது.எளிமையான சொற்களைப் பயன்படுத்தாமல் மிக இறுக்கமான ஈர்ப்புக் கலந்த சொற்களைப் பிரமிள் பயன்படுத்துவதனால்தான் அவர் மனதில் நினைத்திருந்த அந்த ஆன்மநிலையும், உணர்வுநிலையும் வெளிப்படையாக வந்து விழுகின்றன. மூன்று அல்லது நான்கு அடிகளில் ஒரு பிரமாண்டத்தை மிக இயல்பாகச் சொல்லிவிட முடிகிறது இவரால்.

**தனித்தன்மை மிக்க உள்ளடக்கம் - பரிதிப் பிணம்**

கவிதையின் வாசிப்பினை அதிகரித்தால் ஆழமாக மீண்டும் மீண்டும் அர்த்த மொழிகளுக்குள் வாசித்துக் கொண்டே மனதை செலுத்தி, ஒரு முதுமையின் நிலையினை எவ்வாறெல்லாம் குறிப்பால் உணர்த்த முடியுமோ அவ்வாறெல்லாம் முதுமையின் எல்லையை அர்த்தப்படுத்தி விடுகிறார் பிரமிள். இவருக்கான காட்சி நிலைப்படுத்த்லும் இவருக்கான உள்ளடக்க மொழியும் தனித்தன்மை மிக்கவை. படைப்புத் தளத்தில் தனி ஆளுமைப் பண்பாக விளங்கக்கூடியவையாகும் பிரமிளின் கவித்துவம்.

**“காலம் பனித்து விழுந்து / கண்களை மறைக்கிறது /**

**கபாலத்தின் கூரையுள் ஒட்டியிருந்தது /**

**எண்ண வலை பின்னிப் பின்னி /**

**ஏய்கிறது மூளைச் சிலந்தி /**

**கதிர்க் கொள்ளிகள் நடுவே / ஏதோ எரிகிறது /**

**/ஒன்றுமில்லை / பரிதிப் பிணம்/ ”7**

இக்கவிதை முதுமையை மையப்படுத்தி விளக்கும் குறியீட்டுச் சூழலாக அமைகிறது. மனித வாழ்வின் ஒரு சில காலக் கட்டத்தில் அடையும் பருவத்தினைக் கருத்தாழமாகக் கொண்டு கவிதை செயல்படுகிறது. பருவம் மறைந்து மறைந்து ஒருநாள் உருவங்கள் மாறி மாறி, ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கணமும் போட்ட தலைகீழ் ஆட்டங்கள் நின்று போகும். நேரம் அருகில் வந்தாச்சு. ஆதலால் அந்நிலையை நோக்குகிறேன்.... என்று கவிதையின் அர்த்தம் அமைக்கப்பட்டுள்ளது.அவ்வாறு இருப்பின், சூரியனைப் பார்க்கும் போது, **இப்போது கவிஞனுக்குள் கதிரவனின் முதுமை தெரிகிறது.** இந்த அந்தியில் முதுமை அடைந்தசூரியன் கதிர் கொள்ளிகள் நடுவே பிணமாக எரிந்து கிடக்கிறான் என்ற குறியீட்டுப் பொருண்மை வெளிப்படுகிறது.

மனிதனும் பரிதியும் ஒன்றாகப் பர்க்கப்பட வேண்டியிருக்கிறது. என்றும் மானுடமும் கதிரவனும் ஒன்றாகவேப் படுகிறார்கள் என்பதும் மிக அழுத்தமாகவே பதிவு செய்கிறார் பிரமிள்.**எவ்வளவு அழகாக., சூழலியல் வாழ்வோடு மானுட வாழ்வு கலந்து போகிறது**. மிக உயர்ந்த தத்துவப் பார்வை அல்லவா இது. உயர்ந்த தரிசனப்பார்வை அல்லவா இது. எனவே பிரமிள் ஒரு சிறந்த படைப்பாளருக்கும் சிறந்த வாசகனுக்கும் தரிசனக்கவிஞனாகவே காட்சி அளிக்கின்றார். **மொழியும் சூழலும் நிறைந்த படைப்பாகவே** பிரமிளின் படைப்புக்கள் இருப்பதை அறியமுடிகிறது.

**நிறைவாக....**

International Research Journal of Education and Technology (IRJEdT)
‖ ISSN: 2581-7795, Impact Factor 5.007 ‖
‖ Peer-Reviewed | Open Access | International Journal ‖
‖ Volume: 09 | Issue: 08 | Aug - 2026 | www.irjweb.com ‖

ஆன்மீகம் , நிலையாமை, இயற்கைப் புலம், தர்க்கமுறை,, அறிவியல் காரணிகள், வாழ்க்கை பற்றிய தத்துவப் பார்வைகள்ஆகிய நிலைகளில் பிரமிளின் கருப்பொருளோடு கலந்து கவிதையின் அர்த்த மொழிகள் பயனுடையதாக அமைகின்றது. படைப்பின் விரிவும் கவித்துவ தரிசனமும் சூழலியலோடு இரண்டரக் கலந்து இருப்பதை அறியமுடிகிறது.

அடிக்குறிப்புக்கள்

1.பிரமிள் கவிதைகள் பக் – 11
2..பிரமிள் கவிதைகள் பக் – 13
3..பிரமிள் கவிதைகள் பக் –14
4.பிரமிள் கவிதைகள் பக் – 16
5..பிரமிள் கவிதைகள் பக் – 32
6..பிரமிள் கவிதைகள் பக் - 34
7..பிரமிள் கவிதைகள் பக் –36
8..பிரமிள் கவிதைகள் பக் - 42